1986 மே 13] [பேரவைத் தலைவர்]

9. திரு. அ. ரகுமான்கான்.

10. திரு. கு. சுப்பராயன்.

11. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

பேரவையின் 287 (2)-வது விதியின் கீழ், திரு. தி. அன்பழகன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

(ஈ) பேரவை நூலகக் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 290 (1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1986—87-ஆம் ஆண்டிற்கான " பேரவை நூலகக் குழு "விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. திரு. பு. தங்கமணி.

2. திரு. எம். அண்ணாதாசன்.

3. திரு. மு. சந்திரசேகர்.

4. திரு. செ. செம்மலை.

5. திரு. சு. பாலன்.

6. டாக்டர் கே. சமரசம்.

7. திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்.

8. திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்.

9. திரு. டி. என். முருகானந்தம்.

பேரவையின் 290(3)-ஆவது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இக்குழுவின் தலைவராக இருப்பார்.

(உ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு— உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 294(1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை

1986–87 ஆம் ஆண்டிற்கான ''பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு'' விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. திரு. யு. பி. மாதையன்.
2. திரு. வி. ஆர். கிருஷ்ணசாமி.
3. திரு. வே. தமிழ்மணி.
4. திரு. மு. சின்னக்குழந்தை.
5. திரு. எஸ். சங்கரலிங்கம்.
6. திரு. எஸ். பி. துரைராசு.
7. திரு. ஆ. சந்திரசேகரன்.
8. திரு. சா. ஜெயச்சந்திரன்.
9. திரு. பொன் முத்துராமலிங்கம்.
10. திரு. எஸ். என். இராமசாமி.
11. திரு. வை. பாலச்சந்திரன்.

பேரவையின் 294 (2)-வது விதியின் கீழ் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(முற்பகல் 10-30)

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) விதி 112-ன் கீழ் தொழிலாளர்கள் பணிக்கொடை நிதி பற்றி நிதியமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 112-ன் கீழ் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றை அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் 'தொழிலாளர்களுக்கு பணிக் கொடை நிதி ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு தீர்மானித்துள்ளது, மாநில அரசுக்குத் தெரியுமா?' என்பது குறித்து விடுத்த உடுக்குறியிட்ட வினா எண். 260 (வரிசை எண் 4169)-க்கு முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 25–3–1986 ஆம் நாளன்று சட்ட மன்றப் பேரவையில் விடை அளித்தார்கள். அந்த விடைக்கு ஒரு திருத்தத்தோடு கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட நான் விரும்புகிறேன்.